# DEPOSTITION OF WITNESS

## IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT MUNSIF, NAGERCOIL

## O.S. No. 133 of 2019

**Deposition of the Witness : DW3**

**Solemnly Affirmed by Thiru/Tmt. Bench Clerk in accordance with the provision of Act X of 1873.**

| | |
|---|---|
| Name | : மனோ சுகுமாரன் |
| Father's Name / Husband's name | : வேலய்யா |
| Village | : அச்சன்குளம் |
| Taluk | : அகஸ்தீஸ்வரம் |
| Religion | : |
| Age | : |
| Date | :24.02.2026 |

**முதல்விசாரணை.**

நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்ததன் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனது சொந்த ஊர் பொற்றையடி. வழக்கு சம்மந்தப்பட்ட கோவில் பொற்றையடி ஊரில் உள்ளது. அதன் பெயர் ஒற்றை பனை இசக்கியம்மன் கோவில்.

மேற்படி கோவிலில் ஆத்தியப்பன் குடும்பத்தினர் நிர்வகித்து வருகின்றனர். கோவில் இருக்கும் இடத்திற்கு வடக்கு பக்கம் கால்வாய் உள்ளது. அதனை தொட்டு பொன்னார் நாடார் மனை உள்ளது. மேற்படி பொன்னார் நாடார் எனக்கு பூட்டன் ஆவார். மேற்படி பொன்னார் நாடாருக்கு ஒரே மகன் மாசாணமுத்து. அவருக்கு மூன்று ஆண் குழந்தைகள். சுடலைமாடன், சுப்பிரமணிய நாடார் மற்றும் வேலைய்யா. மேற்படி வேலைய்யா எனது தந்தை ஆவார். கோவில் இருக்கும் இடமும் பொன்னார் நாடார் சொத்தும் வாரிசு உரிமை அடிப்படையில் எனக்கு உரிமைப்பட்டது.

மேற்படி கோவிலில் திருவிழாக்கள் எனக்கு தெரிந்த நாளிலிருந்து ஆத்தியப்பன் குடும்பத்தார்களால் நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருடமும் ஆடி மாதத்தில் மேற்படி திருவிழா நடைபெறும். ஒவ்வொரு வாரத்திலும் மொத்த 2 நாட்கள் வெள்ளி, செவ்வாய் விளக்கு ஏற்றுவார்கள். ராஜதுரை என்பவர் இவ்வழக்கின் ஒரு தரப்பினர். ராஜதுரை என்பவர் சாமித் தோப்பு பக்கம் உள்ள செட்டிவிளை ஊரில் தாமசம். மேற்படி ஊர் கோவிலிலிருந்து 3 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. மேற்படி ராஜதுரையோ அவர் சார்ந்தவர்களோ மேற்படி கோவில் திருவிழா நடத்தியது இல்லை. மேற்படி கோவிலில் அனந்தம்மை, முனிசாமி மற்றும் பெரியசாமி ஆகியோர்கள் சாமி ஆடுவார்கள். மேற்படி விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும்.

<u>**குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**</u>